# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

******

முறையீட்டு மனு எண்: 0217/2018/மா
ஆணை நாள்: 13–03–2019

திருமதி. M. நவுசாத் பேகம்,
திண்டுக்கல் – முறையீட்டு மனுதாரர்

மாநகராட்சி ஆணையர்,
திண்டுக்கல் மாநகராட்சி,
திண்டுக்கல். – எதிர் மனுதாரர்

திண்டுக்கல் மாநகராட்சி, நரிப்பறை பகுதியில் வசிக்கும் திருமதி. எம். நவுசாத் பேகம் என்பவரது 11.10.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 15.10.2018 அன்று பெறப்பட்டு, முறையீட்டு மனு எண்.0217/2018 என எண்ணிடப்பட்டு, விசாரணை மேற்கொள்ளப்பட்டு அறிக்கை பெறப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

## ஆணை:

திருமதி. எம். நவுசாத் பேகம், முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில், தான் குடியிருக்கும் வீட்டிற்கு சொத்துவரி விதிக்க திண்டுக்கல் மாநகராட்சி ஆணையருக்கு ஆணையிட கோரியுள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் மனு மீதான அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்க திண்டுக்கல் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவத்தின் 24.01.2019 நாளிட்ட அறிவிப்பாணையின்படி ஆணையிடப்பட்டது.

திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் தனது 11.02.2019 நாளிட்ட அறிக்கையில், மனுதாரர் சொத்துவரி விதிக்கக் கோரும் இடமானது அரசு புறம்போக்காக உள்ளது என்றும், வரி விதிப்பு செய்யக்கோரும் இடத்திற்கு எந்தவிதமான ஆவணங்களும் இணைக்கப்படவில்லை என்றும், மனுதாரர் திருமதி. எம். நவுசாத்பேகம் என்பவர் வரிவிதிப்பு கோரும் இடத்திற்கு உரிய பத்திர ஆவணங்கள் இணைத்து அனுப்பும் பட்சத்தில் புதிதாக வரி நிர்ணயம் செய்யப்படும் என்று தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரர் 22.11.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் விசாரணைக்கு ஆஜராகி தனது விளக்கம் அளிக்க இம்முறைமன்ற நடுவத்தின் 17.10.2018 நாளிட்ட அழைப்பாணையின் படி ஆணையிடப்பட்டது. ஆனால் முறையீட்டு மனுதாரர் திருமதி. எம். நவுசாத் பேகம் ஆஜராகவில்லை. திரு. எ. மாரியப்பன் என்பவர் ஆஜராகி திருமதி. நவுசாத் பேகம் என்பவர் தனக்கு வேண்டியவர் என்றும், அவருக்கு உடல்நிலை சரியில்லை என்றும், இதனால் அவரால் ஆஜராக முடியவில்லை என்றும், எனவே, தான் ஆஜராகியுள்ளேன் என்றும், ஏற்கனவே அனுப்பப்பட்ட மனு என்னால் தயார் செய்யப்பட்டது என்றும் தெரிவித்து தன்னை விசாரணைக்கு ஆஜராக முறையீட்டு மனுதாரரால் அனுமதி கடிதம் வழங்கியுள்ளதாக தெரிவித்து அக்கடிதத்தை சமர்ப்பித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரருக்கு மீண்டும் ஒரு வாய்ப்பளித்து, 07.01.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் விசாரணைக்கு ஆஜராகி தனது விளக்கத்தினை அளிக்க இம்முறைமன்ற நடுவத்தின் 03.12.2018 நாளிட்ட அழைப்பாணையின்படி ஆணையிடப்பட்டது. ஆனால் முறையீட்டு மனுதாரர் விசாரணைக்கு ஆஜராகி தனது விளக்கத்தினை அளிக்கவில்லை.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை திண்டுக்கல் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை ஆகியவைகள் பரிசீலிக்கப்பட்டதில், மனுதாரர் தனது முறையீட்டு மனுவுடன் ரூ.150/- மதிப்புள்ள முத்திரைத்தாளில் எழுதப்பட்டுள்ள, பதிவு செய்யப்படாத ஆவணத்தின் நகல் இணைத்து, அதன் அடிப்படையில் சொத்துவரி விதிக்க கோரியுள்ளது விதிமுறைகளின்படி ஏற்புடையதல்ல. முறையீட்டு மனுதாரர் விசாரணைக்கு அழைத்தும், விசாரணைக்கு வருகை தராமலும், விளக்கம் ஏதும் அளிக்காமல் இருப்பதும் மனுதாரர் தனது சார்பாக அளிக்க விளக்கம்

ஏதும் இல்லை எனக்கருதி மேலும் மாநகராட்சி அறிக்கையை ஏற்று இம்முறையீட்டு மனு மீதான தொடர் நடவடிக்கையினை கைவிடலாமென்றும், மனுதாரர் உரிய ஆவணங்களுடன் திண்டுக்கல் மாநகராட்சி ஆணையருக்கு விண்ணப்பித்து உரிய பரிகாரம் தேடிக்கொள்ள மனுதாரருக்கு அறிவுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 13-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

19/3/19

19/3/19

பெறுநர்

1. திருமதி. M. நவுசாத் பேகம்,
நரிப்பாறை, முகமதியாபுரம் பின்புறம்,
திண்டுக்கல்.

2. ஆணையர்,
திண்டுக்கல் மாநகராட்சி,
திண்டுக்கல்.

நகல்

முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு 3
இ. கோ. / உதரி